**செய்தி வெளியீடு** **நாள்: 03.02.2025**

**வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி, விளாங்காடுபாக்கத்தில் புதிய சமுதாய நலக்கூடம், கொளத்தூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், முதல்வர் படைப்பகம் எனப்படும் ''மக்கள் சேவை மையம் (Citizen Service Centre)'', பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகரில் புதிய சமுதாய நலக்கூடம் மற்றும் ஆர். கே. நகர் சட்டமன்ற தொகுதி, தண்டையார்பேட்டையில் புதிய ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் (Tondiarpet Integrated Sports Centre) என 4 பணிகளை மாண்புமிகு அமைச்ச ர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் துவக்கி வைத்தார்.**

********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (3.2.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி, புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கத்தில் **ரூ.8.65 கோடி** மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பேப்பர் மில்ஸ் சாலையில் **ரூ.49.50 கோடி** மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், முதல்வர் படைப்பகம் எனப்படும் "மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)" பணிகளையும், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகர், சென்ட்ரல் அவென்யூ சாலையில் **ரூ.19.24 கோடி** மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும் மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி, தண்டையார்பேட்டையில் **ரூ.24.60 கோடி** மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு மையத்தின் (Tondiarpet Integrated Sports Centre) பணிகளையும் **என 4 பணிகளை** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர் அவர்கள், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், திரு.நேதாஜி உ. கணேசன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், திரு.அ.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.ஏ.எஸ்.முருகன், திரு.சரவணமூர்த் , செயற்பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.புழல் எம். நாராயணன், திரு.சரவணன் திரு.ஐ.சி.எப்.முரளி, திரு.கே.சந்துரு, திரு.மகேஷ்குமார், விளாங்காடுபாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.பாரதி சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.டில்லிபாபு, திருமதி.யோகபிரியா தனசேகர், திரு.நாகராஜன், திருமதி.தாவுத்பீ, திருமதி.ஸ்ரீதணி, திருமதி.சாரதா, உள்ளாட்சி பிரதிநிதி திரு.புழல் எம். நாராயணன், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்துகொண்டனர்.